**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**முன்னிலை – திரு. S.V. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
போச்சம்பள்ளி.

2023 – ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**M.C.No. 9/2022**

CNR No. TNKI070016312022

**1. G. கவிதா**
**2. மைனர் G. மித்ரா, வயது 11,**

**... மனுதாரர்கள்**

**– எதிராக –**

**V.காந்தி**

**... எதிர்மனுதாரர்**

**இம்மனுவானது 12.09.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 02.06.2023 ம் தேதி என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர் திரு. S.R.மாணிக்கபிரபு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இம்மனு, சாட்சியம், ஆவணங்கள், மனுதாரர் தரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டு, இந்நீதிமன்றம் இன்று வழங்கும்.**

**உத்தரவு**

**மனுதாரர்கள் எதிர்மனுதாரரிடமிருந்து மாதம் தலா ரூபாய் 10,000 ஜீவனாம்சம் கேட்டும் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கான ஜுவனாம்சதொகை ரூபாய். 4,80,000 த்தை கேட்டும் குவிமுச பிரிவு 125 ன் படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.**

**<u>மனுவின் சுருக்கம்</u>**

**1. மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவர் மனைவி ஆவார்கள் என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பெரியோர்கள் நிச்சயித்தவாறு உற்றார், உறவினர்கள் முன்னிலையில் கடந்த 28.01.2007 ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், (தற்போது பர்கூர் வட்டம்) மாடரஹள்ளி அஞ்சல் நாகம்பட்டி கிராமத்தில் உள்ள எதிர்மனுதாரரின் இல்லத்தில் பந்தல் அமைத்து திருமணம் நடைபெற்றது என்றும், மனுதாரரின் திருமணத்தின் போது பெற்றோர்கள், மனுதாரருக்கு 10 சவரன் தங்க நகைகளும், சீர்வரிசைப்பொருட்கள் 100000/- மதிப்பு கொண்டதும் மற்றும் எதிர்மனுதாரருக்கு 3 சவரன் தங்க நகைகள் அணிவித்தும் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரரும் எதிர்மனுதாரரும் சுமார் 3 வருடங்கள் நல்லமுறையில் வாழ்ந்து வந்தனர் என்றும், திருமணத்தின் பயனாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் மித்ரா என்ற ஒரு பெண்பிள்ளையான மைனர் 2ம் மனுதாரர் கடந்த 15.04.2011 தேதியில் பிறந்து 1ம் மனுதாரரின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருந்து கல்வி பயின்று வருகின்றார்.**

**2. இந்நிலையில், எதிர்மனுதாரர் கடந்த சில வருடங்களாக குடிப்பழக்கதிற்கு ஆளாகி தினந்தோறும் குடித்துவிட்டு வந்து இரவு நேரங்களில் 1ம் மனுதாரரை அடித்து துன்புறுத்தி வந்தார் என்றும், மேலும், எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு தேவையான உணவு பொருட்களை வாங்கி கொடுக்காமலும், மைனர் மனுதாரரின் பராமரிப்பு மற்றும் கல்வி செலவுக்கு பணம் கொடுக்காமலும் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வருகிறார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர், 1ம் மனுதாரரையும், மைனர் மனுதாரரையும் பராமரிக்காமல் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி எதிர்மனுதாரர் செய்து வரும் கார் டிரைவர் வேலை மற்றும் விவசாயத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் அனைத்தும் குடித்துக்கொண்டு, அவரது விருப்பம்**

போல் செலவு செய்துக்கொண்டும் வாழ்ந்து வருகிறார் என்றும், மேலும் எதிர்மனுதாரர் அவரது தாயார் மற்றும் சகோதரின் துர்போதனையின் பேரில் மனுதாரர்களுக்கு எவ்வித சவரட்சனைகளையும் செய்யாமல் இருந்து வருகிறார் என்றும், இதுகுறித்து பல முறை எதிர்மனுதாரருக்கு, மனுதாரரும் மற்றும் குடும்ப பெரியோர்களும் அறிவுரைகள் கூறியும் எதிர்மனுதாரர் தன் செயல்பாடுகளை மாற்றிக்கொள்ளாமல் தொடர்ந்து அக்கிரம செயல்களில் ஈடுபட்டு வருகிறார். மேலும் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு எதிர்மனுதாரரும், அவரது தாயார் மற்றும் சகோதரி ஆகியோர்கள் சேர்ந்து எதிர்மனுதாரரின் இல்லத்தில் இருந்து மனுதாரர்களை அடித்து வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட்டனர் என்றும், மேற்படி சம்பவம் குறித்து மனுதாரர் மற்றும் ஊர்பஞ்சாயத்தார்கள் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு மனுதாரர்களை வீட்டிற்கு சேர்க்க மாட்டேன் என்றும் வீட்டிற்கு வந்தால் அடித்து கொன்று விடுவதாகவும் மிரட்டியுள்ளார்.

3. எதிர்மனுதாரர் போக்கில் மாற்றம் ஏற்பட்டு மனுதாரர் மைனர் மனுதாரரை வீட்டிற்கு அழைத்துக்கொள்வார் என்று மனுதாரர் மைனர் மனுதாரரின் எதிர்கால வாழ்க்கையை எண்ணி அதே ஊரிலே வாடகை வீடு எடுத்து வசித்து வருகிறார் என்றும், ஆனால் எதிர்மனுதாரரின் போக்கில் இது நாள் வரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றும், மேலும் எதிர்மனுதார், மனுதாரர்களுக்கு எவ்வித ஜீவனமும் செய்யாமல் தான்தோன்றித்தனமாக இருந்து வருகிறார்.

4. இந்நிலையில், எதிர்மனுதாரருக்கு, மனுதாரர் மற்றும் ஊர் பெரியோர்கள் மூலமாக அறிவுரைகள் கூறியும் குடிப்பழக்கத்தை விடாமல் தொடர்ந்துகொண்டு, வீட்டிற்கு தேவையான உணவு பொருட்களை வாங்கி கொடுக்காமலும், பெண் பிள்ளையின் பராமரிப்பு மற்றும் கல்வி செலவுகளுக்கு பணம் கொடுக்காமலும் இருந்து வருகிறார் என்றும்,

இதனால், மனுதாரர் சுமார் 2 ஆண்டுகளாக மனுதாரர் கூலி வேலை செய்துகொண்டு மைனர் பெண் பிள்ளையை பள்ளியில் படிக்க வைத்துக்கொண்டு வாடகை வீட்டில் வாழ்ந்துகொண்டு கஷ்ட ஜீவனம் செய்துவருகிறார் என்றும், மனுதாரர் மற்றும் மைனர் மனுதாரின் பெண் பிள்ளையை துன்பம் மிகுந்த வாழ்க்கைக்கு எதிர்மனுதாரர் அவரது செயல்பாடுகளுமே காரணமாகும் என்றும், மேலும் எதிர்மனுதாரர் வசித்துவரும் வீட்டினை கட்டுவதற்காக மனுதாரர் அவரது பெற்றோர்களிடமிருந்து 4 வருடத்திற்கு முன்பு ரூ.5 இலட்சம் ரொக்கம் வாங்கிக்கொடுத்தார் என்றும், அந்த பணத்தையும் எதிர்மனுதாரர், மனுதாரரின் பெற்றோர்களுக்கு திருப்பிக்கொடுக்கவில்லை என்றும், மனுதாரரின் பெற்றோர்கள் சிலரிடம் கடனாக பெற்று தான் மேற்படி ரூ.5 இலட்சத்தை எதிர்மனுதாரருக்கு கொடுத்தனர் என்றும், மேற்படி தொகைக்கும், மனுதாரரும், மனுதாரரின் பெற்றோர்களும் தற்பொழுதும் வட்டி செலுத்தி வருகின்றனர் என்றும், மனுதாரர் கூலி வேலை செய்து கொண்டு, மைனர் பெண் பிள்ளையை படிக்க வைத்து மனுதாரர் வாடகை வீட்டில் வாழ்ந்துகொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும், மனுதாரரின் பெற்றோர்களும் வயதான நிலையில் போதிய வருமானம் இல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்துவருகின்றனர் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரின் பொறுப்பற்ற மற்றும் சட்டவிரோத செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், மேலும், எதிர்மனுதாரர் தனது வருமானம் முழுவதையும் தனக்காக மட்டுமே செலவு செய்துகொண்டும், குடித்துக்கொண்டும் மனுதாரர்களை பராமரிக்காமல், புறக்கணித்து செயல்பட்டு வருவதால் மனுதாரர்கள் ஊரில் கூலி வேலை செய்துக்கொண்டு வாடகை வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

5. இந்நிலையில், மனுதாரர்கள் தற்பொழுது உண்ண

உணவின்றியும், தங்களை பராமரித்துக்கொள்ள இயலாமலும் மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வருகின்றனர் என்றும், மனுதாரர் உண்ண உணவிற்காகவும், நோய்வாய்பட்டால் மருத்துவ சிக்ச்சைக்கு பணம் இல்லாமலும், மைனர் பெண்பிள்ளையை பராமரிப்பு, கல்வி கட்டணங்கள், போக்குவரத்து செலவு மற்றும் மருத்துவ செலவுகளுக்கு போதிய பணம் இல்லாமல் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர் என்றும், மனுதாரரின் பெற்றோர்களும் வயோதிகத்தின் காரணமாக எவ்வித வருமானமும் ஈட்ட முடியாமல் கஷ்டப்பட்டு வருவதால் அவர்களாலும் மனுதார்களை பராமரிக்க இயலாத நிலையில் உள்ளனர்.

6. ஆனால், எதிர்மனுதாரரின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட சொத்து நாகம்பட்டி கிராமத்தில் 2 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. அதில் 100 தென்னை மரங்கள் 50 மாமரங்கள் மற்றும் காலப்பயிர்கள் செய்தும் அதன் மூலம் வருடத்திற்கு 3.இலட்சம் வரை எதிர்மனுதாரருக்கு வருமானம் வருகிறது. எதிர்மனுதாரர் செய்து வரும் டிரைவர் வேலை மூலமாக ரூ.25,000 /— வரை மாதம் சம்பாதித்து வருகிறார்.

7. எதிர்மனுதாரர் ஒரு இந்து கணவன் தன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமைகளை செய்யாமலும் ஒரு பெண் பிள்ளைக்கு தந்தை என்ற முறையில் பராமரிக்காமலும் எதிர்மனுதாரர் தனது விருப்பத்திற்காக மட்டுமே எப்பொழுதும் குடித்துக்கொண்டு தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரரின் செயல்பாடுகள் அனைத்தும் நியாயத்திற்கும், சட்டத்திற்கும் புறம்பானதாகும் என்றும், இந்நிலையில் மனுதாரர் கூலி வேலை செய்து கொண்டு தனிமையாக யாருடைய உதவியின்றி மைனர் பெண் பிள்ளையை வைத்துக்கொண்டு கஷ்ட ஜீவனம் செய்துவருவதால், வாழ்க்கை பொருளுதவி கோரி எதிர்மனுதாரர் மீது இவ்வழக்கினை தாக்கல் செய்யவேண்டிய அவசர அவசியம் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது

என்றும், எதிர்மனுதாரர் மனுதாரரை மனைவி என்ற அடிப்படையிலும், மைனர் மனுதாரரான பெண் பிள்ளைக்கு தந்தை என்ற அடிப்படையிலும் பாதுகாத்து பராமரிக்கவேண்டியது எதிர்மனுதாரரின் சட்டப்படியான கடமையாகும்.

8. எனவே, கனம் நீதிமன்றத்தார் அவர்கள் தயவுசெய்து எதிர்மனுதாரரை நீதிமன்றம் வரவழைத்து, மனுதாரரையும் மற்றும் சாட்சிகளையும் விசாரித்து 1ம் மனுதாரருக்கும் மற்றும் மனுதாரரின் மைனர் பெண் பிள்ளைக்கும் தலா ரூ10,000/– வீதம் மாதந்தோறும் ரூ. 20,000/–ம் ஜீவனாம்சம் வழங்கவும், எதிர்மனுதாரர் கடந்த இரண்டு வருடத்திற்கும் மேலாக மனுதாரரையும், மைனர் மனுதாரரான பெண் பிள்ளையும் புறக்கணித்து வாழ்ந்து வருவதால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான ஜீவனாம்ச தொகை ரூ. 4,80,000த்தை மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் வழங்க தக்க உத்தரவிட வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார்.

2. இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து பதிவு தபால் மூலமாக அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி பதிவு தபாலை எதிர்மனுதாரர் தாயர் பெற்றுக்கொண்டுள்ளார். எனவே எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு போதுமானது எனவும், சார்வு ஆனதாக கருதி எதிர்மனுதாரர் இம்மனுவில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்.

3. மனுதாரர் இம்மனுவில் தனது தரப்பு வழக்கை நிருபிக்க மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் குறியிடு செய்யப்பட்டுள்ளன.

4. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது மனு சங்கதிகளை முன்வைத்து வாதம் செய்தார். மேலும் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரரின் மூலம் ஜுவனாம்சம் பெற்றுத்தர உத்தரவு

பிறப்பிக்கும்மாறும், மனு தேதியிலிருந்து மனுதாரர்களுக்கு ஜுவனாம்சம் வழங்க உத்தரவிட வேண்டுமென்றும், மேலும் மனுதாக்கல் செய்ததற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எதிர்மனுதாரர் மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருவதால் அந்த காலக்கட்டத்திற்கும் சேர்த்து ஜுவனாம்சம் வழங்க உத்தரவிட வேண்டுமென வாதம் செய்தார்.

5. தீர்வு

இம்மனுவில் முடிவு செய்ய வேண்டிய அம்சம் என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

6. மனு, மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மனுதாரர் தரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 ஆவணங்கள் குறியிடு செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 28.01.2007 ல் நாகம்பட்டி கிராமத்தில் உள்ள எதிர்மனுதாரர் இல்லத்தில் பந்தல் அமைத்து திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமணத்தின் போது மனுதாரருக்கு 10 சவரன் தங்க நகைகளும், சீர்வரிசை பொருட்களும் செய்யப்பட்டதாகவும், எதிர்மனுதாரருக்கு 3 பவுன் தங்க நகைகள் அணிவித்து திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமணத்தின் வாயிலாக 2ம் மனுதாரர் பிறந்ததாகவும், 1ம் மனுதாரர் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கவில்லை. மேலும் இவ்வழக்கில் ம.சா.ஆ.1 திருமண அழைப்பிதழ் அசல் மற்றும் ம.சா.ஆ.2 திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம், மா.சா.ஆ.5 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல் ஆகிய ஆவணங்களையும் 1ம் மனுதாரரின் சாட்சியத்தையும் பரிசீலனை செய்தபோது 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றதும், ம.சா.ஆ.5 ஆவணத்தில் தந்தை மற்றும் தாயின் பெயர்

ஆகிய இடங்களில் 1ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 1ம் மனுதாரர் சாட்சியத்தில் கூறியுள்ளது போல் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்று அதன் பயனாக 2ம் மனுதாரர் பிறந்துள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. மேலும், எதிர்மனுதாரரும், 1ம் மனுதாரரும் திருமணத்திற்கு பிறகு ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து பின்னர் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தற்போது மனுதாரர்கள், எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருவதாக 1ம் மனுதாரர் சாட்சியம் அளித்துள்ளார். 1ம் மனுதாரரை எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து துன்புறுத்துவதும், பராமரிக்காமலும் இருந்து வருவதாகவும் எதிர்மனுதாரர் மனுதாரர்களை புறக்கணித்து விட்டு சென்றுவிட்டது 1ம் மனுதாரரின் சாட்சியம் மூலமாக தெரியவருகிறது. மேலும் மேற்படி சங்கதிகளை எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி மறுக்கவில்லை. எனவே மேற்படி சங்கதிகள் மனுதாரர்கள் தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. மேலும், 1ம் மனுதாரர் சாட்சியம் மூலமாக எதிர்மனுதாரர் டிரைவராக வேலை செய்து மாதம் ரூபாய் 25,000 வருமானம் ஈட்டுவதும், மேலும் நாகம்பட்டி கிராமத்தில் எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் நிலத்தில் உள்ள 100 தென்னை மரங்கள் மற்றும் 50 மா மரங்கள் மற்றும் காலப்பயிர்கள் செய்து அதன் மூலமாக வருடத்திற்கு ரூபாய் 3,00,000 ஈட்டுவதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எதிர்மனுதாரர் எவ்வளவு வருமானம் ஈட்டுகிறார் என்பதை காட்ட மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் மேற்படி வருமானம் ஈட்டும் சங்கதியானது எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே எதிர்மனுதாரர் போதுமான வருமானம் ஈட்டி வருவதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மேலும் மனுதாரர்கள் தங்களது வாழ்க்கைக்கு தேவையான பொருளுதவி இல்லாமல் கஷ்ட ஜீவனம் நடத்தி வருவது மனு மற்றும் 1ம் மனுதாரரின் சாட்சியம் மூலமாக இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

10. குவிமுச பிரிவு 125ன் கீழ் கணவனானவர் தனது மனைவியையும், குழந்தைகளையும் எவ்வித காரணமும் இன்றி பராமரிக்காமல் புறக்கணித்தால் அவர்களை சட்டப்படி பராமரிக்க கடமைப்பட்டவர் ஆவார். இவ்வழக்கில் 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரின் சட்டபூர்வமான மனைவி என்பதும், 2ம் மனுதாரர் எதிர்மனுதாரரின் பிள்ளை என்பதும் மனுதாரர்களை எதிர்மனுதாரர் புறக்கணித்து உள்ளதும் இந்நீதிமன்றத்திற்கு மனுதாரர் சாட்சியம் மற்றும் ஆவணம் மூலமாக தெரியவருகிறது. எனவே மனுதாரர்களை சட்டப்படி பராமரிக்க எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் என்பதால், மனுதாரர்களுக்கு வாழ்க்கை பொருளுதவி அளிக்க எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. இவ்வழக்கின் சூழல் மற்றும் தன்மை மற்றும் எதிர்மனுதாரரின் பொருளாதார சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்நீதிமன்றம் மனுதாரர்களுக்கு கீழ்க்கண்டவாறு எதிர்மனுதாரர் வாழ்க்கை பொருளுதவி வழங்க வேண்டும் என உத்தரவிடுகிறது.

1. 1ம் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 8,000 வழங்க வேண்டும் என்றும், 2ம் மனுதாரருக்கு ரூபாய் 7,000 வழங்க வேண்டும் என்றும், மேற்படி ரூபாய் 15,000த்தை ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் மனுதாரர்களுக்கு வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. 2ம் மனுதாரருக்கு கல்வி செலவுத்தொகையாக ஒவ்வொரு வருடத்திற்கும் தலா ரூபாய் 25,000த்தை எதிர்மனுதாரர் கல்வியாண்டின் தொடக்க மாதமான ஜூன் 5ம் தேதிக்குள் வழங்க வேண்டும் என்று

உத்தரவிடப்படுகிறது.

3. மேலும் மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்த தேதியிலிருந்து உத்தரவான தேதி வரையான மாதங்களுக்குண்டான ஜீவனாம்ச நிலுவை தொகையினை உத்தரவான தேதியிலிருந்து 3 மாதத்திற்குள் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. ஆனால் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தனியாக இருந்து வருவதாகவும், மேற்படி காலகட்டத்திற்கும் சேர்த்து ரூபாய். 4,80,000 ஜீவனாம்சம் வழங்க கேட்டுள்ள பரிகாரத்தை பொறுத்து குவிமுச பிரிவு 125 ன் கீழ் மனுதாக்கல் செய்வதற்கு முன்புள்ள காலத்திற்கு ஜீவனாம்சம் வழங்க வழிவகை இல்லாத காரணத்தால், மேற்படி காலத்திற்கான ஜீவனாம்சம் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

என்னால் சொல்லப்பட்டதை, தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023 –ம் ஆண்டு ஜுன் மாதம் 09–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்.</u>

ம.சா.1. திருமதி. கவிதா

<u>மனுதாரர் தரப்பு ஆவணங்கள்.</u>

| | |
|---|---|
| ம.சா.ஆ.1. | 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்தின் திருமண அழைப்பிதழ் அசல் |
| ம.சா.ஆ.2 | 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணத்தின் போது |

| | |
|---|---|
| | சேர்ந்து எடுத்துகொண்ட புகைப்படம். |
| ம.சா.ஆ.3 | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| ம.சா.ஆ.4 | 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| ம.சா.ஆ.5 | 2ம் மனுதாரரின் பிறப்பு சான்று நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| ம.சா.ஆ.6 | மனுதாரரின் குடும்ப அட்டை நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி சாண்றாவணங்கள்**

இல்லை.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி.**

**குறிப்பு**

1ம் மனுதாரருக்கு உத்தரவின் நகல் இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.